


திருவொற்றியூரில் அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ உயர்மட்ட பாதை தூண்கள்.

### 1.8 கிலோ மீட்டர் சுரங்கத்தில் செல்லும்

# வண்ணாரப்பேட்டை -விம்கோ நகர் 'மெட்ரோ' பணிகள் தீவிரம்

## 9 ரெயில் நிலையங்கள் அமைக்கப்படும்

சென்னை, ஜுன், 16–

சென்னை நகரில் மெட்ரோ ரெயில் சேவை செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்ட்ரலிருந்து விமான நிலையத்துக்கு ஒரு வழிதடத்திலும், வண்ணாரப் பேட்டையில் இருந்து விமான நிலையத்துக்கு மற்றொரு வழித்தடத்திலும் மெட்ரோ ரெயில் இயக்கப்பட்டு வருகிறது.

**நீட்டிப்பு**

வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர், விம்கோ நகர் வரை மெட்ரோ ரெயிலை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்பட்டன.

வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் இடையே 9.2 கிலோ மீட்டர் வரை மெட்ரோ ரெயில் இயக்கப்படுகிறது. இதில் சுரங்க பாதையிலும், உயர்மட்ட பாதையிலும் ரெயில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. சுரங்கபாதையில் 1.8 கிலோ மீட்டர் தூரத்தில் வண்ணாரப்பேட்டை, தியாகராயர் கல்லூரி, கொருக்குப்பேட்டை ஆகிய 3 ரெயில் நிலையங்கள் அமைகின்றன.

உயர்மட்ட பாதையில் தண்டையார்பேட்டை, டோல்கேட், தாங்கல், கவுரி ஆசிரமம், திருவொற்றியூர், விம்கோ நகர் ஆகிய 6 ரெயில் நிலையங்கள் உள்ளன.

வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் இடையேயான மெட்ரோ ரெயில் கட்டுமான பணிகள் மும்முரமாக நடந்து வந்தன. இதில் பெரும் பாலான பணிகள் முடிந்து உள்ளது.

இதையடுத்து அடுத்த ஆண்டு (2020) ஜுன் மாதம் வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் இடையே மெட்ரோ ரெயில் ஓடும்.

இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் இடையே மெட்ரோ பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

உயர்மட்ட பாதையில் தண்டவாளங்கள் அமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. இப்பணிகள் முடிந்த பிறகு இந்த திட்டத்தில் பெரும் பாலான பணிகள் முடிந்து விடும்.

**அடுத்த ஜுன் மாதம்**

சுரங்கப்பாதை மற்றும் உயர்மட்ட பாதையில் ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. இந்த பணிகள் முடிந்து அடுத்த ஆண்டு ஜுன் மாதம் தயாராகி விடும் என்றார்.

விம்கோ நகர் வரை மெட்ரோ பணிகள் முடிந்தவுடன் அங்கிருந்து விமான நிலையத்துக்கு ரெயில் இயக்கப்படும்.